

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.06.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் சுவிசேஷ லுத்ரன் திருச்சபையின் பிஷப் டேனியல் ஜெயராஜ், ஜீவராஜ் குருக்கள், சார்லஸ், எட்வின் சார்லஸ், செல்லதுரை, சாலமன், பாரதி, ஜஸ்டின், சத்தியமூர்த்தி, திருமதி பிரசன்னா மெர்சிபாய், என்வால் துரை, ஈஸ்டர் ராஜ், இவான்ஜிலுக்கல் லுத்ரன் திருச்சபையின் ஸ்டான்லி ஜோசப், ஆண்ட்ரூஸ் வாசுதேவன், அன்பழகன், கிரைஸ்ட் லுத்ரன் திருச்சபையின் டாக்டர் ஸ்டான்லி ஜோஸ், உபதேசியார் நலவாரிய துணை தலைவர் போதகர் பால் தயாநிதி, உறுப்பினர் நிக்சன், தென்னிந்திய திருச்சபையின் ஹேமில்டன் மற்றும் சாம்சன், ஜான்சன் மான்சிங், ஜான் சிம்சன் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் முதன் முதலில் அச்சு இயந்திரத்தை நிறுவி தமிழுக்குப் பெருமை சேர்த்த சீகன் பால்கு அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், நிவேதா முருகன் ஆகியோர் உள்ளனர்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் காணை வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பாக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கிளை கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார். உடன் காணை வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.முருகன், மாநில மருத்துவர் அணித்துணை தலைவர் டாக்டர். எ.வ.வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜ், உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன், மு.பெ.கிரி, அ.சே.வில்வநாதன், பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, அ.நல்லத்தம்பி, மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணாநிதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தனித் தீர்மானம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 246ன்படி மக்கள்தொகை கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய அடிப்படையான பணியான மக்கள் தொகை கணக்கெடுப்பினை 2021ஆம் ஆண்டு மேற்கொள்ளாமல் ஒன்றிய அரசு இன்றுவரை காலம் தாழ்த்தி வருவது எதனால்? முதல் ஆண்டு கோவிட் பெருந்தொற்றைக் காரணமாக சொன்னார்கள். தற்போது கோவிட் சென்று 3 ஆண்டுகளுக்கு மேலான பின்பும் அப்பணியை மேற்கொள்ளாமல் இருப்பது ஒன்றிய அரசு தன் கடமையைப் புறக்கணிக்கும் செயல் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தொடர்ந்து கோரிக்கை வைப்பது மக்கள்தொகைக் கணக்கெடுப்பை மட்டுமல்ல, அத்துடன் சேர்த்து சாதிவாரிக் கணக்கெடுப்பையும் உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று வலியுறுத்தி கடந்த 20.10.2023 அன்று இந்திய பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். அவ்வாறு ஒன்றிய அரசு களப்பணியை மேற்கொள்ளும் போது கிடைக்கப்பெறும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மாநில அரசு எடுக்கும் முடிவுகளுக்கும், இயற்றும் சட்டங்களுக்கும் தான் சட்டரீதியான பாதுகாப்பு எப்போதும் இருக்கும். மாறாக, அந்தந்த மாநில அரசுகள் ஒரு சர்வே (Survey) என்ற பெயரில் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பது, பின்னர் அதன் அடிப்படையில் சட்டங்களை இயற்றுவது என்றால் அது பின்னொரு நாளில் நீதிமன்றங்களால் ரத்து செய்யப்படும் வாய்ப்புள்ளது.

**ஒன்றிய அரசு சாதிவாரி கணக்கெடுப்பையும் நடத்த வேண்டும்!**

எனவேதான், இந்தக் காரணங்களின் அடிப்படையில், ஏற்கெனவே தாமதப்படுத்தப்பட்டுள்ள தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு உடனடியாகத் தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் சாதிவாரியான மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும் சேர்த்தே நடத்தவேண்டும் என்றும் இந்தப் பேரவை வாயிலாக பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிய விரும்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த தனித் தீர்மானம் வருமாறு :-

**தீர்மானம்**

**"இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகிய அனைத்திலும் சம உரிமையும், சம வாய்ப்பும் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் திட்டங்களைத் தீட்டி, சட்டங்கள் இயற்ற வழிவகை செய்ய சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு அவசியம் என்று இப்பேரவை கருதுகிறது.**

**எனவே 2021ஆம் ஆண்டு மேற்கொண்டிருக்க வேண்டிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை உடனே தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் இம்முறை சாதிவாரியான கணக்கெடுப்பையும் இணைத்தே நடத்தவேண்டும் என்றும் ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது".**

**இந்தத் தீர்மானத்தை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் வரவேற்றுப் பேசினர். இதனைத் தொடர்ந்து தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## டெல்லி உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிரான மனு:

# புதிய மனு தாக்கல் செய்ய கெஜ்ரிவாலுக்கு அனுமதி!

## அமலாக்கத்துறை கோரிக்கை நிராகரிப்பு!

*புதுடெல்லி, ஜூன் 27 -* டெல்லி மதுபானக் கொள்கை தொடர்பான வழக்கில் சிபிஜ சிறப்பு நீதிமன்றம் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு வழங்கிய ஜாமீனை டெல்லி உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. இந்த உத்தரவுக்கு எதிராக கெஜ்ரிவால் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவானது உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் மனோஜ் மிஸ்ரா மற்றும் எஸ்.வி.என்.பாட்டி ஆகியோர் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது கெஜ்ரிவால் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, 'இந்த விவகாரத்தில் டெல்லி உயர்நீதிமன்றம் இறுதி தீர்ப்பு வழங்கி விட்டதால், எங்களது மனு தானாகவே காலாவதி ஆகி விட்டது.

எனவே அதனை திரும்பப்பெற நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார். ஆனால் இதற்கு அமலாக்கத்துறை தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் பி.வி.ராஜூ கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அவரது கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள், 'மதுபானக் கொள்கை விவகாரத்தில் டெல்லி உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவுக்கு எதிராக தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுவை கெஜ்ரிவால் தரப்பு திரும்பப் பெற அனுமதி வழங்கப்படுகிறது. இறுதி தீர்ப்புக்கு எதிராக புதிய மனு தாக்கல் செய்யவும் அனுமதி வழங்கப்படுகிறது' என்று உத்தரவிட்டு, முன்னதாக தாக்கல் செய்திருந்த மனுவை தள்ளுபடி செய்து வழக்கை முடித்து வைத்தனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பாலங்கள் துறை**

பா.து.ந.க.எண்.பி3/0223/2022

**e- மின்னணு குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**மின்னணு குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை -**
**கீழ்க்கண்ட பணிக்கு மின்னணு குறுகியகால ஒப்பம் ஒரு உறை முறையில் கோரப்படுகிறது**

| வ.எண் | பணியின் விவரம் |
|---|---|
| 1 | மண்டலம்-1, வார்டு-5ல் ஏற்கனவே உள்ள மாணிக்கம் நகர் சுரங்கபாதையில் நீர் சேகரிக்கும் தொட்டி அமைத்தல் மற்றும் மேற்பரப்பினை மறுசீரமைக்கும் பணி - பணியின் மதிப்பு **ரூ.1.32 கோடி (GST @ 18% உட்பட)** ஒப்ப முன் வைப்புத் தொகை:. **ரூ.1,32,000/-** |

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின்னணு ஒப்பத்தில் கலந்து கொள்ளலாம்.

ஒப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் **நேரம் : 02.07.2024** அன்று பிற்பகல் **3.00மணி** வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் **நேரம் : 03.07.2024** பிற்பகல் **3.30 மணி**

செ.ம.தொ.இ / 2081 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (பாலங்கள் துறை)**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/0735/2024 **மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 (பகுதி -1 வார்டு-2) சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் கத்திவாக்கம் பேருந்து நிலையத்தில் தரைத்தளம் மேம்படுத்தும் பணி, நேரகாப்பாளர் அறை, சுற்றுச்சுவர் மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி (2 சிப்பங்கள்)

பணியின் உத்தேச தொகை: குறைந்தபட்சம் **ரூ.55 லட்சம் அதிகபட்சம் ரூ.99 லட்சம்**
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் **1 %**

**ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் 11.07.2024 அன்று மாலை 3.00 மணி வரை**

**ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: 12.07.2024 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2087 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**


## ரூ.100 கோடி மதிப்பீட்டிலான நில மோசடி வழக்கு!

# முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஜாமீன் மனு தள்ளுபடி!

## கரூர் நீதிமன்றம் உத்தரவு!

*சென்னை, ஜூன் 27 -* நில அபகரிப்பு புகாரில் முன்ஜாமின் மனு தள்ளுபடி ஆனதைத் தொடர்ந்து, அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜய பாஸ்கர் தலைமறைவானதாக கூறப்படுகிறது. அவரை கைது செய்ய சி.பி.சி.ஐ.டி., அதிகாரிகள் முனைப்பு காட்டி வருகின்றனர்.

கரூர் மாவட்டம் மண்மங்கலம் தாலுகா குப்பிச்சிபாளையத்தைச் சேர்ந்த பிரகாஷ், கரூர் எஸ்.பி. அலுவலகம் மற்றும் போலீஸ் ஸ்டேசனில் அளித்த புகாரில், தனக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பு நிலத்தை எம்.ஆர். விஜயபாஸ்கர் போலியாக பத்திரப்பதிவு செய்து கொலை மிரட்டல் விடுத்தார்' என தெரிவித்து இருந்தார். இது தொடர்பாக மாவட்ட குற்றப் பிரிவு போலீசார் எம்.ஆர். விஜயபாஸ்கர் உட்பட 7 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். பிறகு வழக்கு சி.பி.சி.ஐ.டி.,க்கு மாற்றப் பட்டது.

இதனால், விஜய பாஸ்கர், கரூர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமின் கேட்டு மனுத்தாக்கல் செய்திருந்தார். நேற்று முன்தினம் (ஜூன் 25) இந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதனையடுத்து எம்.ஆர்.விஜயபாஸ்கர் வட மாநிலத்திற்கு தப்பி சென்றதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனையடுத்து, அவரை கைது செய்ய சி.பி.சி.ஐ.டி. போலீசார் அவரை தேடி வருகின்றனர்.



சென்னை, தியாகராய நகரில், தமிழ்நாடு அரசின் சார்பில், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 119வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (26.06.2024) அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், ம.பொ.சி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
### ஜூன் 27 (1962)



திராவிட இயக்க வரலாற்றில் 1938ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒருமைல் கல்லாகும். இந்தப் போராட்டத்தில் திருச்சி, உறையூர் முதல் சென்னை வரை 42 நாட்கள் இந்தி எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 577 மைல்கள் நடந்தே வந்தவர் இவர். 87 பொதுக் கூட்டங்களில் உரையாற்றியுள்ளார்.

மேலும், சென்னையில் பள்ளி முன் இந்தி திணிப்பை எதிர்த்து, மறியல் செய்து கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் வேலூர் சிறையில் இருந்தார்.

இவரின் 50 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு அவர் வாழும்போதே பெற்ற ஒரே அங்கீகாரம் தி.மு.க. சார்பில் அண்ணா வழங்கிய விருதுதான். சுயமரியாதை இயக்கத்திற்காக உழைத்தவர்களுக்கு தி.மு.க. சார்பில் விருது வழங்கி சிறப்பிக்க அண்ணா முடிவு செய்தார். இதற்கு இவருடைய பெயரைத்தான் அண்ணா முதன்முதலில் தேர்வு செய்தார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றபோது, முதல்முறையாக ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டத்தை தொடங்கி வைத்து அதற்கு "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்" என்று இவரது பெயரை வைத்து, தொடர்ந்து செயல்படுத்தினார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**